# வருடாந்தஅறிக்கை - 2013

வரையறுக்கப்பட்டசீ-நோர் நிறுவனம்

**இல: 90(335),**
**டி.ஆர்.விஜேவர்தனமாவத்தை,**
**கொழும்பு - 10.**
**இலங்கை.**

ISO 9001-2008 CERTIFIED

# உள்ளடக்கம்

பக்கம்


1. கூட்டிணைந்த தகவல்கள் 2
2. தொலை நோக்கு, பணி, நோக்கங்கள் 3
3. கம்பனியின் வரலாறு 4

4 வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் 2012 வருடாந்த அறிக்கை மீதான கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சரின் அவதானிப்பு - 5

4. தலைவரின் மீளாய்வு 6

5. பணிப்பாளர்களின் அறிக்கை 9

6. வருடத்தினுள் அடையப் பெற்றவைகள் 11

7. நிதி சம்பந்தமான செயற்பாடுகள், தற்போதைய நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் 14

8. கணக்காய்வாளரின் அறிக்கை 16

9. முழுமையான வருமானம் பற்றிய கூற்று 18

10. நிதி நிலைமை பற்றிய கூற்று 19

11. உரிமைப்பங்கில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய கூற்று 21

12. காசுப்பாய்ச்சல் கூற்றுகள் 22

13. நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 24

14. முழுமையான வருமானம் பற்றிய கூற்றுக்கள் 31

15. கணக்காய்வாளரின் அறிக்கை மீதான கருத்துரைகள் 40

# கூட்டிணைந்த தகவல்கள்

| | |
|---|---|
| **கம்பனியின் பெயர்** | வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம். |
| **சட்டரீதியான வடிவம்** | 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் உருவாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனி, பின்னர் 2007 ஆம் ஆண்டில் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. |
| **பதிவு செய்யப்பட்ட காரியாலயம்:-** | 335, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு -10 |

**பணிப்பாளர்கள் சபை :**

| | |
|---|---|
| பி.வீ. சரத்குமார த சில்வா, - | பணிப்பாளராகவும், தலைவராகவும் 20.05.2010 ல் நியமனம் பெற்றார் |
| திரு. கே. உஜித் அனுராதா - | பணிப்பாளராகவும், முகாமைப் பணிப்பாளராகவும் 20.05.2010 ல் நியமனம் பெற்றார் |
| திரு. பீ.ஏ.எஸ். அத்துலகுமார - | 23.06.2010 ஆம் திகதி பணிப்பாளராகவும், திறைசேரி பிரதி நிதியாகவும் நியமனம் பெற்றார். |
| திரு. ஜி.டி. குணதாச - | 25.08.2010 ல் பணிப்பாளராக நியமனம் பெற்றார். |
| திரு. எம்.எப். கே. சய்ராஸ் - | 25.08.2010 ல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். |

| | | |
|---|---|---|
| **கம்பனிச் செயலாளர்** | : | ஏ.எண்ட்.ஏ.அசோசியேற் வரையறுக்கப்பட்ட (தனியார்) கம்பனி. |
| **கணக்காய்வாளர்கள்** | : | குணசேகர ரத்னாயக்க அண்ட் கம்பனி,பட்டயக் கணக்காளர்கள் 65/3 சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை கொழும்பு -02. |
| **வங்கியாளர்கள்** | : | இலங்கை வங்கி |
| | : | ஹட்டன் நஷனல் வங்கி |
| | : | மக்கள் வங்கி |
| | : | பான் ஏசியா வங்கி |
| **தெழிற்சாலைகள்** | : | மட்டக்குளி படகுத் துறை<br>வேருவளை படகுத் துறை (உத்தேச) |
| | : | காரை நகர் படகுத் துறை (உத்தேச) |
| **ஏனைய திட்டங்கள்** | : | சீநோர் ஒரியன் சீ பூட் ரெஸ்டுரண்ட் (முகாமை தீர்மானம் ஒன்றின்படி இயங்குகிறது) |
| | : | ஓட்டோமாபைல் வேலைத்தளம் (முகாமை தீர்மானம் ஒன்றின்படி இயங்குகிறது. |

## எமது நோக்கு

மீன்பிடி படகுகள் மற்றும் உள்ளாச படகுகளை கட்டுவதிலும் மற்றும் மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்ளை வழங்குவதிலும் இலங்கைச் சந்தையில் முன்னணி வகித்தல். மற்றும் படகு கட்டுவதில் ஒரு சர்வதேச ரீதியிலான ஒரு அங்கீகாரத்தினை பெறல்.

## எமது பணி

அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனி என்றவகையில் திறமையாகவும் நற்பயன் அளிக்கக் கூடியதாகவும் உயர்தரமான மீன்பிடிப் படகுகளையும் மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் போட்டி ரீதியிலான விலைகளில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கல்.

## எமது நோக்கங்கள்

- பைபர் கிளாஸ் ஏற்றுமதியில் ஒரு அடையாளமிக்க ஏற்றுமதியாளர் என்ற நிலையை அடைதல்.
- சர்வதேச தரத்திலான பைபர் கிளாஸ் படகுகளை தயாரிப்பவர் என்ற நன்மதிப்பினை பெறல்.
- பைபர் கிளாஸ் படகு தயாரிப்பு துறையில் வெளிநாடுகளில் முதலீடு செய்யும் முதலீட்டாளர் என்ற நிலையை அடைதல்.
- உயர் தரமான மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்கி இலங்கையின் மீன்பிடித் துறையின் அபிவிருத்திக்கு பயனுள்ள பங்களிப்பினை வழங்கும் பங்களிப்பாளராக இருத்தல்.
- சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்குபவராக திகழ்தல்.

## கம்பனியின் வரலாறு

வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம் 1990 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி அரசுக்கு சொந்தமான வியாபார நடவடிக்கைகளை கொண்டு நடாத்துவதற்காக வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடைய பொதுக் கம்பனியாக அரசினால் உருவாக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க பொதுக்கூட்டுத் தாபனங்கள் அல்லது அரசுக்கு சொந்தமான தொழில் நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் கீழ் சீநோர் அபிவிருத்தி நிறுவனம் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டது.

சீநோர் அபிவிருத்தி நிறுவனமானது உள்ளூர் மீன்பிடிச் சமூகத்தின் கல்வியையும் நலன்களையும் விருத்தி செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட, இலாப நோக்கற்ற நிறுவனமாக 1967ல் தொழிற்படத் தொடங்கியது. இந்த நிறுவனமானது கடந்த காலங்களின் போது கீழே சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பல மாற்றங்களுக்கு முகங்கொடுத்துள்ளது.

1967 சீநோர் அபிவிருத்தி நிறுவனமானது நோர்வே நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது. அந்த அரச சார்பற்ற நிறுவனம் NORGES, GODTEMPLAR UNGDOMS FORBUND (NGU) என்ற நிறுவனமாகும்.

1971 1938 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உத்தரவாதம் மூலம் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றாக கூட்டிணைக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட சீநோர் அபிவிருத்தி நிறுவனம் என அழைக்கப்பட்டது.

1985 38 ஆம் இலக்க தொழில் சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட சீநோர் அபிவிருத்தி நிறுவனம் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சியாக மாற்றம் பெற்றது.

1990 1987 ஆம் ஆண்டின் 23 அம் இலக்க பகிரங்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளை பொதுக் கம்பனியாக மாற்றும் சட்டத்திற்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனம் என்ற நிலையிலிருந்து மாற்றம் பெற்றது.

வரையறுக்கப்பட்ட சீநோர் அபிவிருத்தி நிறுவனம் முன்பு அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் பொறுப்பு நிறுவனம் என்ற நிலையை விடுத்து தொடர்ந்து இயங்குவதற்கு 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம் உருவாக்கப்பட்டது.

இந்த புதிய கம்பனியின் முற்றுமுழுதான பங்குமூலதனமாக (ரூபா40,000,000.00) திறைசேரியின் செயலாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

## கடற்றொழில் ,நீரியல் வழங்கல் அபிவிருத்தி கௌரவ அமைச்சர் அவர்களின் வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் 2012 வருடாந்த அறிக்கை மீதான அவதானிப்பு

நோர்வே நாட்டின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் உள்நாட்டு மீன்பிடி சமூகத்தவரின் கல்வி, சேமநலன் என்பவற்றுக்கு உதவி செய்யும் விதத்தில் 1967 ஆம் ஆண்டு "சீநோர் அபிவிருத்தி நிறுவனம்" என்ற பெயரில் இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் சீநோர் அபிவிருத்தி நிறுவனம் பல்வேறு பெயர்களினால் அழைக்கப்பட்டாலும் காலப்போக்கில் சீநோர் அபிவிருத்தி நிறுவனம் 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம் என்ற பெயரில் அரசினால் நிறுவகிக்கப்படும் ஒரு நிறுவனமாக மாற்றம் பெற்றது.

மீன்பிடித்துறைக்கு அவசியமான மீன் பிடி வலைகள் மற்றும் படகுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதும், வெளிநாட்டவர்களிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் வலைகள் மற்றும் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படும் வலைகளை விற்பனை செய்வதனையும் பிரதான வியாபார நோக்கங்களாக கொண்ட வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் கீழ் 97 ஊழியர்கள் தற்பொழுது கடமையாற்றுகின்றனர்.

2008ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை நிறுவனம் அடைந்துள்ள நட்டத்தில் ஒரு வீழ்ச்சியினை காட்டுகிறது. இது நிறுவன கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது ஒரு சிறந்த நிலைமையாகும். 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 அண்டில் பெற்ற நட்டத்தின் அளவு 50% வீதத்திற்கு மேல் வீழ்ச்சியடைந்துள்ளது.

இது தற்போதைய வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு நடாத்துவதற்கு பெரிதும் உதவியாக அமையும். வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கணக்கீட்டு செயற்பாடுகள் உரிய கணக்கீட்டு நியமங்களை கடைப்பிடிக்கப்பட்டு சரியான மற்றும் நியாயமான தகவல்களை வெளிக்காட்டுவதாக பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் கணக்காய்வாளரினால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது இந்த நிறுவனத்தின் வெளிப்படையான தன்மைக்கு சிறந்ததொரு கூற்றாக காணப்படுகிறது.

தற்பொழுது மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் தேவைகளுக்காக அவசியமான பொருட்களை தனியார் நிறுவனங்களின் மூலமும் உற்பத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிறுவனங்களுடன் போட்டியினை ஏற்படுத்தி உயர்ந்த தரத்திலான உற்பத்திகளை மீனவ சமூகத்திற்கு வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

**டாக்டர் ராஜித சேனாரத்ன**
கடற்றொழில் நீரியல் வழங்கள் அபிவிருத்தி அமைச்சர்

## தலைவரின் மீளாய்வு

**2013 ஆடிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதி ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையை அமைச்சரவை உறுப்பினர்களுக்கு சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.**

---

2013 ஆம் ஆண்டு சீநோர் நிறுவனத்திற்கு ஒரு இலாபகரமான ஆண்டு என்பதனை தெரிவித்துக் கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இலாபம் குறைந்தளவில் காணப்பட்டாலும் கடந்த 5 வருடங்களில் (தற்போதைய பணிப்பாளர் சபை பொறுப்பேற்பதற்கு முன்னர்)காணப்பட்ட நிலைமையில் பாரிய திருப்பத்தினை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த காலங்களில் சுமார் 35 மில்லியன் ரூபா அளவு ஒவ்வொரு வருடமும் நட்டத்தினை பதிவு செய்துள்ளது. கடற்றொழில் நீரியல் வழங்கல் அபிவிருத்தி கௌரவ அமைச்சர் அவர்களின் வழிகாட்டலுடன் , சீநோர் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர் குழுவின் கடின உழைப்புடன் 2013 ஆம் ஆண்டு பாரிய முன்னேற்றத்தினை காட்டியுள்ளது.

2013 ஆம் ஆண்டின் இந்த இலாபத்தன்மைக்கு பின்வரும் காரணிகள் பிரதானமாக அமைந்தன என நான் நம்புகிறேன்.

**அ**. கடல்சார் நிருமாணத்துறையில் துணிச்சலாக ஈடுபட்டது.

**ஆ**.செயற்பாடுகளில், ஊழியர் குழுவின் சிறந்த முகாமை ஒழுங்கமைப்பின் பிரதிபலனாக 100 ஊழியர்களின் மூலமாக 267 மில்லியன் ரூபா வியாபார புரள்வினை அடைந்துகொள்ள முடிந்துள்ளது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டு 354 ஊழியர்களுடன் 325 மி.ரூபா புரள்வாக காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக திறமையான ஊழியர் முகாமை. கிரய முகாமையில் பொதுவான வளர்ச்சி என்பவற்றின் பிரதிபலனாக தேரிய இலாப வீதம் 2013 ஆண்டு வளர்ச்சியடைந்துள்ளது.

**இ**. வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் ஊழியர்குழுவின் எண்ணிக்கை 354 ல் இருந்து 100 ஆக 70% வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

சீநோர் நிறுவனம் படகு கட்டுமான வேலைகளில் அதன் இலாபத்தில் ஒரு வளர்ச்சி போக்கினை காட்டியுள்ளது. இது பற்றி இந்த அறிக்கையில் எவ்விடத்திலாவது குறித்துக்காட்டப் பட்டிருக்கும். 45 அடி நீளமான “ரீமறன் ஹல்” (Trimaran Hull) என்ற படகு கட்டப்பட்டு சோமாலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்தப்படகினை எரிபொருள் கொண்டும் காற்றின் விசை கொண்டும் இயக்க கூடியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தப் படகின் பொருளாதார ரீதியிலான சிக்கனம் மற்றும் சூழலுக்கு இசைவான தன்மை காரணமாக, கம்பனி மேலும் மூன்று படகுகளை நிர்மாணிபதற்கான கேள்விக் கட்டளைகளை பெற்றுள்ளது.

கம்பனி பாரம்பரியமான வியாபாத்தினை மேற்கொணடு வந்துள்ளதுடன், சீநோர் நிறுவனம் இந்த வருடத்தில் உள்ளூர் மீன்பிடித் துறைகளுக்காக கடற்றொழில் நீரியல் வழங்கல் அபிவிருத்தி அமைச்சினால் விடுக்கப்பட்ட ஒரு பாரிய அளவிலான கேள்விக் கட்டளையின்படி துடுப்புகளால் இயங்கும் சிறு படகுகளை தயாரிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது. இந்த துறையின் வளர்ச்சியில் இதன் மொத்த பங்களிப்பு 90% வீதமாக காணப்பட்டது. மேற்குறிப்பிட்ட சாதனை ஒரு குறிப்பிடத்தக்க முக்கிய விடயமாக காணப்படுகிறது. ஏனெனில் சீநோர் நிறுவனம் படகு துறை அபிவிருத்தி நடவடிக்கையிலும் மற்றும் கடல் கடந்த நிர்மாணப் பணிகளிலும் வருடம் பூரணமாக ஈடு பட்டிருந்த வேளையிலேயே இந்த படகுத் தயாரிப்பு வேலைகளும் இடம்பெற்றன.

திக்கோவிட்ட மீன்பிடித்துறை முகத்தினை உபயோகிப்பவர்களுக்கு உதவி சேவைகளை வழங்குவதற்காக, சகல வசதிகளையும் கொண்ட உயர்தரமான சர்வதேச மட்டத்திலான தரத்தினை உறுதி செய்யக் கூடிய விதத்தில் வடிவமைத்தல், திட்டமிடல் மற்றும் தரம்

வாய்ந்த படகுகளை நிர்மாணிக்கக் கூடிய இயந்திரங்களைக் கொண்ட ஒரு வேலைத்தளத்தினை நிர்மாணிப்பதற்கான பெரும் பணி, வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்காக 250 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாக அமுல் செய்யப்படும். இதன் முதல் கட்டம் ( ஆற்றுப்பகுதி) பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இது செயற்பட தயாரான நிலையிலும் காணப்படுகிறது. ஈரத்தன்மை- கட்டுப்படுத்தப்பட்ட பொறியியல் சூழலிலேயே இந்த படகு நிர்மாணப் பணிகள் இடம்பெறுவது, இந்த வசதியின் மூலம் வழங்கப்பட்ட தனியான ஒரு சேவையாகும்.

கப்பல்கள் சம்பந்தமான ஒரு உயர்தரமான மென் பொருளின் (Software) அறிமுகத்துடன் வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் படகு கட்டுமான வேலைகள் ஒரு புதிய உச்சத்தினை அடைந்துள்ளது. இந்த மென்பொருளின் மூலம் உறுதித் தன்மையை பரிசீலிக்கவும், சக்தி அளிக்கவும், கடலுக்கு இசைவான அமைப்பு ரீதியிலான பலம் மற்றும் படகுகளின் உடற்பகுதியினை உருவாக்கல் போன்ற வேலைகளையும் மேற்கொள்ளும் வசதிகள் காணப்படுவதினால் கம்பனிக்கு குறைகளற்ற படகுகளை நிர்மாணிக்கக் கூடியதாக இருக்கிறது. எனவே இதன் மூலம் தவறுகள் அல்லது குறைபாடுகள் பற்றி தயாரிப்பின் பின்னர் பரிசீலிக்கின்ற வேலை காணப்படவில்லை. ஏனெனில் இவை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டு படகுகள் தயாரிப்பதற்கு முன்னரே சரி செய்யப்படுகிறது. இதன் மூலம் பாரிய அளவில் நேரத்தினையும் பணத்தினையும் சேமிக்க முடியும். இந்தவகையில் படகு கட்டுதல் மற்றும் கிரய அமைப்பினை ஒழுங்கமைத்தல் போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி, சீநோர் நிறுவனத்தின் உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான சர்வதேச சந்தையினை கைப்பற்றுவதில் ஒரு உறுதியான அடித்தளத்தினை ஏற்படுத்துவதில் முன்னணி வகித்தது எனலாம்.

சீநோர் நிறுவனத்தில் தற்பொழுது காணப்படும் வசதிகள் மற்றும் நிர்மாணப் பணிகளில் எனக்குள்ள பரந்த அனுபவம் என்பவற்றை உபயோகித்து சீநோர் நிறுவனத்தின் சேவைகளை கடல்சார் நிருமாணப் பணிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டிய தேவை எனக்கிருந்தது. இதன் பிரதிபலனாக முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்ட திக்கோவிட்ட துறைமுக மேம்படுத்தல் திட்டத்தினை காண்பதில் நான் பெருமையடைகிறேன். பூர்த்திசெய்யப்பட்ட திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகம் இன்று தென்கிழக்காசியாவில் ஒரு சிறந்த துறைமுகமாக காணப்படுகிறது.

நீண்ட காலத்தில் சீநோர் நிறுவனம் கடல்சார் நிர்மாண நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும். 200 மி.ரூபா செலவில் பேருவலை மருதானையில் கப்பல் நன்கூரமிடும் தளத்தினை நிருமாணிப்பதற்கும் மற்றும் திக்கோவிட்ட இறங்கு தளத்தினை 73 மி.ரூபா செலவில் நிர்மாணிப்பதற்குமான பணிகள் எமக்கு வழங்கப்பட்டிருந்தது. இது 2014 ஆம் ஆண்டில் இலாபத்தினை அதிகரிக்க ஏதுவாகலாம்.

இந்த திட்டத்தினை பூர்த்தி செய்வதன் மூலம் சீநோர் நிறுவனத்தின் வியாபாரக் குறியீட்டின் மதிப்பு மேலும் வளர்ச்சியடையும். தாய்ப்படகுகளை பெற்றுக் கொள்வதற்கான நிர்மாண வேலையின் விபரங்களை முடிவு செய்வதில் ஒரு ஆலோசகராக செயல்படுவதற்கு சீநோர் நிறுவனத்தின் மீது கடற்றொழில் நீரியல் வழங்கல் அபிவிருத்தி அமைச்சு நம்பிக்கை வைத்துள்ளது. இலங்கை மீன்பிடி அபிவிருத்தியுடன் இணைந்த மகிந்த சிந்தனை தீர்மானத்தின்படி பலநாள் - படகுகளை நிர்மாணிப்பதற்கு சீநோர் நிறுவனத்திற்கு காணப்படும் நிபுணாத்துவத்தின் அடிப்படையிவ் உதவிகளையும் வழங்கியுள்ளது.

இதற்கு மேலும் முன்னோக்கி சென்று சீநோர் வியாபார குறியீட்டு நாமத்தினை உலகிற்கு அறிமுகப்படுத்தி படகு நிர்மாணப் பணிகளிலும் மற்றும் கடலசார் நிர்மாணத் திட்டங்களிலும்

ஒப்பந்தங்களை இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். இது வெற்றி பெறுமானால் இலங்கைக்கும் சீநோர் நிறுவனத்திற்கும் இலாபகரமாக அண்ணிய செலாவணியினை பெற்றுத்தரும் ஒரு வருமானமாக்கம் என்பதனையும் நிரூபிக்கும்.

சீநோர் நிறுவனம் ஒரு புதிய பிரதி முகாமையாரை (சந்தைப்படுத்தல்) சேவைக்கு அமர்த்தியுள்ளது. இதற்கு சீநோர் நிறுவனமும் அனுமதி வழங்கியிருக்கிறது. இலக்கினை அடைந்துகொள்வதற்கான சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. படகு தொழிற்சாலைகளை புதுப்பித்து தரமுயர்த்தியது மற்றும் சர்வதேச தரம்வாய்ந்த படகு நிர்மாண மென் பொருளினை (Software) 2013 ல் கொள்வனவு செய்தது போன்ற நடவடிக்கைகள் எமது இலக்கு சாத்தியமாவதற்கு ஒரு அத்திவாரமாக அமைந்தன.

2013 ஆண்டு சீநோர் நிறுவனத்திற்கு ஒரு வெற்றிகரமான ஆண்டு என கூறிக் கொள்வதில் நான் பெருமையடைகிறேன். சீநோர் நிறுவனத்திற்கு வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் முன் இடம் பெறாத விதத்தில் வழங்கிய உதவிகளுக்காகவும் கௌரவ அமைச்சர் ராஜித்த சேனாரத்ன அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மேலதிகமாக வருடம்தோரும் பௌதீக ரீதியிலும் மற்றும் மிக முக்கியமான நடவடிக்கைகளிலும் பல்வேறு உதவிகளை வழங்கிய அமைச்சில் என்னுடன் பணியாற்றும் சக ஊழியர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த நிறுவனத்தினை எந்தவித பிரச்சினைகளும் இன்றி நம்பிக்கையூட்டும் எதிர்காலத்தினை நோக்கி இட்டுச் செல்வதற்காக பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கடின உழைப்பு மற்றும் தலைமைத்துவம் என்பவற்றை நான் பெரிதும் பாராட்டுகிறேன். சீநோர் நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் மற்றும் சகல ஊழியர் குழுவிற்கும் அவர்களது அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் தலைமைத்துவ குழு மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை என்பவற்றுக்காக எனது நன்றியினை இறுதியாகவும் ஆனால் குறைவின்றியும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் நன்றி .

**பொறியியலாளர்- பி.வி. சரத்குமார டி சில்வா**
தலைவர் - வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்

## 2013 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான பணிப்பாளர்களின் அறிக்கை

1. 2013 முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்

2. **நிதிப் பெறுபேறுகள்**
   ஆண்டிற்கான தேறிய இலாபம்/நட்டம் பற்றிய விபரம் விரிவான வருமானக் கூற்றில் 18 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **நடவடிக்கைகளின் நிலைமை**

   கம்பனியின் நிலைமை பற்றி 19 ஆம் பக்கத்தில் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

4. **பிரதான நடவடிக்கைகள்**

   கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் முன்னைய நிதிவருடத்தில் காணப்பட்டது போல் மாற்றமின்றி காணப்பட்டது. அவை வருமாறு

   - பைபர் கிளாஸ் படகுகளை கட்டுதல் மற்றும் அது தொடர்பான பொருட்களையும் உற்பத்தி செய்து விற்பனை செய்தல்.
   - நய்லோன் மீன்பிடி வலைகள் மற்றும் அதுதொடர்பான உற்பத்திப் பொருட்களை இலங்கையில் விநியோகிக்கும் ஏக வினியோகத்தர்கள்.
   - மீன்பிடி படகுகள். கடற்றுறை சார்ந்த என்ஜின்கள், உபகரணங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றை பழுதுபார்த்தல் வேலைகளுக்காக வேலைத்தளங்களை நடாத்தல்.

   இதற்கு மேலாக 2012ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் நடவடிக்கைகளும் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன.

   - கடலில் பயனிக்கக் கூடிய சகலவிதமான வள்ளங்களையும் வடிவமைத்தல் மற்றும் திட்டமிடல்.
   - தற்பொழுது காணப்படும் படகுத்துறை வசதிகளை சர்வதேச தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக சிவில் நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடல்.
   - கடல் கடந்த நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடல்.

5. **பங்கிலாபங்கள்.**

   2013 ஆம் ஆண்டிற்கு பங்கிலாபம் வழங்குவதற்கு பணிப்பாளர்கள் சிபாரிசு செய்யவில்லை.

6. **கம்பனியுடன் ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கு பணிப்பாளர்களுக்கு உள்ள அக்கறையும் செய்து கொண்ட ஒப்பந்தங்களும்.**

   இந்த கால எல்லையினுள் கம்பனியுடன் எந்தவித ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும் பணிப்பாளர்களுக்கு அக்கறை காணப்படவில்லை.

7. **கம்பனியின் பங்குகள் மீதான பணிப்பாளர்களின் அக்கறை**

   31.12.2013 ல் முடிவடைந்த வருடத்தில் கம்பனியில் எதுவித பங்குகளையும் பணிப்பாளர்கள் கொண்டிருக்கவில்லை.

8. **கனிசமான பங்குகளைக் கொண்டவர்**

ஐந்தொகை திகதியன்று வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தில் 100% வீதம் திறைசேரியின் செயலாளரிடம் காணப்பட்டது.

9. **நன்கொடைகளுக்கான பங்களிப்பு**

நன்கொடைகளுக்காகவும் அரசியல் நோக்கங்களுக்காகவும் இந்த வருடத்தினுள் எந்தவித பங்களிப்பினையும் கம்பனி மேற்கொள்ளவில்லை.

10. **நிலையான சொத்துக்கள் பொறி, மற்றும் உபகரணங்களில் ஏற்பட்ட மாற்றம்**

மீளாய்வு வருடத்தினுள் நிலையான சொத்துக்கள், பொறி , உபகரணங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய விபரம் 35 ஆம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

11. **வங்கி வசதிகள்**

வருட இறுதிவரை தொடர்ச்சியாக தனது சேவைகளை வழங்கிய வங்கியாளர்கள் எதிர்காலத்திலும் பாதுகாப்புடன் விண்ணப்பிக்கும் பொழுது இச்சேவையை தொடர்ச்சியாக வழங்குவார்கள் என பணிப்பாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

12. **கணக்காய்வாளர்களை நியமித்தல்**

திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குணசேகர ரத்னாயக்க அண்ட் கம்பனி (பட்டயக் கணக்காளர்கள்) வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் 23ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டது.

13. **2013.12.31 ல் உள்ளவாரன வரையறக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் பணிப்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| திரு. பி.வி. சரத்குமார டி சில்வா | - | தலைவர் |
| திரு. கே. உஜித் அனுராதா | - | முகாமை பணிப்பாளர் |
| திரு. பீ.ஏ.எஸ். அத்துல குமார | - | திறைசேரி பிரதிநிதி |
| திரு .ஜி.டி. குணதாச | | |
| திரு. எம்.எப். கே. சய்ராஸ் | | |

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

ஒப்பம்

**பொறியியலாளர்- பி.வி. சரத்குமார டி சில்வா**
தலைவர் - வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்

ஒப்பம்

**ஏ.அண்ட் .ஏ. அ**
(தனியார்) கம்பனி
கம்பனி செயலாளர்

## 2013ஆம் ஆண்டில் அடையப் பெற்றவைகள்

### பைபர் கிளாஸ் படகுகளையும் மற்றும் அது தொடர்பான ஏனைய பொருட்களையும் உற்பத்தி செய்தல்

மீளாய்வு ஆண்டினுள் கம்பனி தெற்கில் உள்ள ஒரு தனியார் வாடிக்கையாளருக்கு திமிங்கிலங்களை அவதானிக்கவும் மற்றும் உல்லாச நடவடிக்கைகளுக்காகவும் 45 அடி நீளமான “சசிமி” (Shashimi) வகையைச் சேர்ந்த ஒரு படகினை தயார் செய்திருக்கிறது. இந்த ரிமரன்ஹல்” (Trimaran Hull) படகிற்கு தற்பொழுது அதிக கேள்வி காணப்படுகிறது. கம்பனி தற்பொழுது கூட்டிணையாத மூன்று வாடிக்கையாளர்களிடமிருந்து கேள்விக் கட்டளைகளைப் பெறுவதற்காக கலந்துரையாடியிருக்கிறது. 55 அடி நீளமான ஏனைய பெரிய படகுகள் மற்றும் 49 ½ அடி நீளமான படகுகள் கேள்விக் கட்டளை மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

45அடி நீளமான “(Trimaran Hull)மீன்பிடி படகு வெற்றிகரமாக கட்டி முடித்ததன் பின்னர் 2013 ஆம் ஆண்டு மார்ச் நடுப்பகுதியில் சோமாலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான கொள்வனவாளர் “நெட்சம்” பவுன்டேசன்” (Nedsom) நிறுவனமாகும். இந்தப்படகினை எரிபொருள் மூலமும் காற்று சக்தியின் மூலமும் இயக்கும் வசதியும் காணப்படுகிறது. இது பொருளாதார ரீதியாகவும் சூழல் ரீதியாகவும் சிறந்ததாக காணப்படுகிறது. இந்த கொள்வனவாளர் சோமாலியாவில் வேறு ஒரு வாடிக்கையாளரையும் அறிமுகம் செய்து வைத்துள்ளார். மற்றும் அவர்கள் 45 அடி நீளமான மூன்று மீன்பிடி படகுகளுக்கான உறுதியான கட்டளைகளை வழங்கியிருக்கிறனர். இந்த படகுகள் 2014 ஜுன் மாதத்தில் ஏற்றுமதி செய்யப்படும்.

இந்த வருடத்தினுள் உள்ளுர் மீன்பிடித் துறையினரின் பாவனைக்காக துடுப்புகளினால் இயக்கப்படும் பெருமளவிலான படகுகள் தயாரிக்கப்பட்டன. இதற்காக பெறுமளவு கேள்விக் கட்டளைகள் கடற்றொழில் நீரியல் வழங்கல் அபிவிருத்தி அமைச்சிடமிருந்தும் மற்றும் நாடுபூராகவும் பல்வேறு மாகாண சபைகளிடமிருந்தும் கிடைக்கப் பெற்றுள்ளன. இதற்கு மேலதிகமாக சீநோர் நிறுவனம் பெரும் எண்ணிக்கையிலான நாலாவித பொருட்களையும் தயாரித்து இருக்கிறது. அதாவது மீன் பெட்டிகள், பனிக்கட்டி பெட்டிகள், நுனியில் அகன்ற துடுப்புகளைக் கொண்ட படகுகள் ,ஆயுதங்களை வைக்கும் பெட்டிகள், பாதுகாப்பு கூடாரங்ள், போன்றனவாகும். வருடத்தினுள் கம்பனியின் படகு தயாரிப்பு பிரிவின் மொத்த வளர்ச்சி 91% வீதமாக காணப்பட்டது. எவ்வாறாயினும் மீன்பிடிப்படகு விற்பனையில் ˙பல்வேறு காரணிகள் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளன. அவை வாடிக்கையாளரின் குடும்ப வருமானம், எரிபொருள் விலைகள், உற்பத்தி செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவாகும்.

## படகுத் துறையினை சீரமைத்தல்

2013 மே 22 ஆம் திகதி சீநோர் நிறுவனத்தின் சீரமைக்கப்பட்ட படகுத் துறை, கௌரவ கடற்றொழில் நீரியல் வழங்கல் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் கடற்றொழில் நீரியல் வழங்கல் அபிவிருத்தி பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது. திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தினை உபயோகிக்கும் படகுகளுக்கு தேவையான பழுது பார்த்தல் வேலைகளை சர்வதேச தரத்தில் வழங்குவதற்கான வசதிகள் இந்த சீரமைக்கப்பட்ட வேலைத்தளத்தில் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் இந்த வேலைத்தளம் செயற்படத் தொடங்கியதும் குறிப்பிடத்தக்க வருமானத்தினை திரட்டுவதற்கான வாய்ப்பு இதற்கு காணப்படுகிறது. புதிதாக உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைக் கொண்டு இயங்கும் மட்டக்குளிய படகுத் துறையின் மூலம் வாடிக்கையாளர்களின் படகுகளை பகுதிகளாக பிரித்தெடுத்து பரீட்சிப்பதற்கும் மற்றும் பழுது பார்த்தலுக்குமான வசதியினை அதிகரிப்பதன் மூலம் வாடிக்கையாளருக்கு சிறந்த வசதிகளை வழங்கலாம் என சீநோர் நிறுவனம் நம்பிக்கை கொண்டுள்ளது. மட்டக்குளிய படகுத் துறை, இந்த நாட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் நிறுவப்பட்டுள்ள இந்தத்துறையில் காணப்படும் ஒரே படகுத் துறையாகும். இது அண்ணளவாக 250 மி.ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## கடல் கடந்த நிர்மாண நடவடிக்கைகள்

சீநோர் நிர்வனம் 2013 ஆம் ஆண்டில் கடல்கடந்த நிர்மாண நடவடிக்கைகளில் துனிச்சலுடன் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் 86 மில்லியன் ரூபா வருமானத்தினை சம்பாதித்துள்ளது. புதிதாகப் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் ஊடாக இந்த துறையில் பாரிய அளவிலான கடல்சார்ந்த நிருமாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்தவகையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல். கப்பல் நன்கூரமிடும் தளங்களை அமைத்தல், மற்றும் இரங்கு தளங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் கம்பனிக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தினை அடைய முடியும். தற்பொழுது கம்பனி இரண்டு பாரிய திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. அவையாவன பேருவளை மருதானை நன்கூரமிடும் தளத்தினை நிர்மாணித்தல். (ரூபா 200 மில்லியன்) மற்றும் திக்கோவிட்ட மீன்பிடி இரங்கு தளத்தினை அமைத்தல் (ரூபா 73 மி. ரூபா) என்பனவாகும். 2014 டிசம்பர் ஆகும் பொழுது இவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

## காரை நகர் படகுத்துறை

பாரம்பரிய கைத்தெரில் மற்றும் சிறு விவசாய முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் “நோத் -சீ லிமிட்டெட்” நிறுவனத்தின் கீழ் செயற்பட்ட யாழ்ப்பான காரைநகர் படகுத்துறை 2011. நவம்பர் 01 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த மாற்றல் 2010.10.13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இடம் பெற்றது. இந்த படகுத்துறை வடக்கில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக பெரிதும் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்தப்படகுத்துறையை, உள்ளூர் அல்லது வெளிநாட்டு முதலீட்டாளரின் உதவியுடன் புனரமைப்பு செய்து பணிகளை ஆரம்பிப்பதற்கு சீநோர் நிறுவனம் தீர்மானித்துள்ளது. முதலில் இலங்கை அரசாங்கம் வடமாகாண மீனவர்களின் நன்மை கருதி வசதிகள் வழங்குவதற்காக 2014 அம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 15 மில்லியன் ரூபாவும், 2015 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 200 மி ரூபாவும் ஒதுக்கியுள்ளது.

## ISO தரச் சான்றிதழ்

வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம் சர்வதேச தரச்சான்றிதழான ISO 9001:2008 சான்றிதழை 2009 அம் ஆண்டிலிருந்து இன்றுவரை வெற்றிகரமாக பராமரித்து வருகிறது.

- **பைபர் கிளாஸ் படகுகள் மற்றும் அது தொடர்பான ஏனைய பொருட்களை உற்பத்தி செய்தல்**

அட்டவணை 1

| வகை | 2013 ஆம் ஆண்டிற்கான இலக்கு (அலகுகள்) | 2013 ஆம் ஆண்டிற்கான இலக்கு (அலகுகள்) | பெறுமதி (மில்லியன் ரூபா்) |
|---|---|---|---|
| 49 1/2 அடி பைபர் கிளாஸ் படகுகள் | 01 | - | - |
| 45 அடி சசிமி படகுகள் | 03 | 02 | 26.84 |
| உல்லாசப் படகுகள் | 05 | 02 | 1.60 |
| உள்நாட்டு துடுப்பு படகுகள் | 450 | 436 | 18.25 |
| வள்ளங்கள் | - | - | - |
| 18 1/2 அடி மற்றும் 19 1/2 அடி FRP படகுகள் | 95 | 79 | 11.85 |
| அகன்ற துடுப்பு படகுகள் | 04 | 04 | 0.63 |
| கோரைப் பாய்கள் (Pallets) | 50 | 46 | 0.50 |
| மீன் பெட்டிகள்/பனிக்கட்டி பெட்டிகள் | 150 | 125 | 1.26 |
| மிதக்கும் அலைதாங்கிகள் (Floating pier) | - | - | - |
| பல்வகை உற்பத்திகள் (ஆயுதங்களை வைக்கும் பெட்டிகள் மற்றும் பாதுகாப்பு கூடாரங்கள், நீண்ட கயிறுகள், உபகரண ங்கள் என்பன) | 1175 | 1065 | 12.46 |
| **மொத்தம்** | 1933 | 1759 | 73.39 |

## “மல்டி பிலமன்ட்” நைலோன் வலைகளை வினியோகித்தல்

மல்டிபிலமன்ட் நைலோன் வலைகலை வினியோகித்தல், அமைச்சரவை உடன்பாட்டுடன் அரசினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சீநோர் நிறுவனத்தின் இரண்டு மீன்பிடி வலை தொழிற்சாலைகள் 2011 நவம்பர் 01 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் விதத்தில் நோத் சீ லிமிட்டெட் என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சீநோர் நிறுவனத்திற்கும், நோத்சீ லிமிட்டெட் நிறுவனத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி வீரவில மற்றும் லுனுவில மீன்பிடி தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் வலைகளை விற்பனை செய்வதற்காக அதிகாரம் ஏக முகவர் என்ற வகையில் சீநோர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஏனைய திட்டங்கள்

### 1. சீநோர் ஓரியன்ட் சீபூட் ரெஸ்டுரண்ட்

1988 அம் ஆண்டில் எடுக்கப்பட்ட முகாமைத் தீர்மானத்தின்படி சீ பூட் ரெஸ்டுரண்ட் நிறுவனம் வரையறுக்கப்பட்ட “ஓரியண்ட் பேல் ஹோட்டெல்” நிறுவனத்தினால் நடைமுறைப் படுத்தப்படுகிறது. முதலீட்டாளரான “ஓரியண்ட் பேல் ஹோட்டல்” நிறுவனம் அதன் வியாபார தந்திரோபாயங்களை மாற்றி எல்லை அளவிலான வருமானத்தினை உருவாக்கியுள்ளது. சீநோர் நிறுவனத்திற்கு இந்த திட்டத்தின் மூலம் மாதாந்த வாடகையும் இலாபத்தில் பங்கினைப் பெறவும் உரித்து காணப்படுகிறது.

### 2. ஒட்டோ மோபய்ல் (Auto Mobile Work Shop) மத்துமகல

2006 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முகாமைத் தீர்மானத்தின்படி இத்திட்டம் புரண்டியர் ஓட்டோமொபைல் லிமிட்டெட் (Frontier Atomobile Limited) நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகிறது.

### மனித வளம்

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 93 ஊழியர்கள் மொத்த ஊழியர் குழுவில் 2013.12.1 ஆம் திகதியில் காணப்பட்டனர்.

| **அமைவிடம்** | **ஊழியர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| தலைமைக் காரியாலயம் | 51 |
| மட்டக்குளி படகுத் துறை | 31 |
| சில்லரை வியாபார நிலையங்கள் ( பேருவலை, காலி. மாத்தறை , தங்காலை , வீரவில, மற்றும் லுனுவில) | 09 |
| நிர்மாண திட்டங்கள் | 02 |
| **மொத்தம்** | **93** |

மேற்குறிப்பிட்ட ஊழியர்கள் பின்வரும் விதத்தில் வகைப் படுத்தப்பட்டுள்ளனர்.

- நிரந்தர ஊழியர்கள் - 76
- தற்காலிக ஊழியர் - 01
- ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் - 15
- பயிலுணர் ஊழியர்கள் -01

## 2013 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள்

மீளாய்வு ஆண்டில் ரூபா 277,502.24 (வரிக்கு பின்னர்) தொகை தேறிய இலாபம் ஏற்பட்டுள்ளது. கம்பனியின் ஆண்டுக்கான புரள்வு 267.097,142.90 ரூபாவாக காணப்பட்டது. இதன் விபரம் வருமாறு.

அட்டவணை -3

| விபரம் | புரள்வு மி. ரூபா | தேறிய இலாபம் மி.ரூபா |
|---|---|---|
| 1. கம்பனி உற்பத்திகள் | 73,392,604.99 | 3,391,513.53 |
| 2. ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 17,260,043.52 | (8,810,999.25) |
| 3.வியாபார நடவடிக்கைகளிலிருந்து வருமானம் | 113,045,648.74 | |
| 4. நிர்மாண வேலைகளில் இருந்து வருமானம் | 63,398,845.65 | 5,696,987.96 |
| **மொத்த வருமானம்** | 267,097,142.90 | 277,502.24 |

அட்டவணை -4

| விபரம் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 277.25 | 255.60 | 345.99 | 324.75 | 217.75 | 267.09 |
| மொத்த லாபம்/(நட்டம்) | 21.05 | 21.34 | 34.45 | 51.22 | 57.19 | 73.83 |
| தேறிய லாபம்/(நட்டம்) வரிக்கு பின் | (25.85) | (30.36) | (23.55) | (16.25) | (7.09) | 0.27 |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் | (6.46) | (7.59) | (5.89) | (4.06) | (1.77) | .070 |
| நிலையான சொத்துக்கள் ( தேறிய புத்தகப் பெறுமதி) | 80.66 | 346.97 | 338.56 | 274.19 | 287.58 | 309.50 |
| நிலையான வைப்புகள் | 6.02 | 6.02 | - | - | - | 1.30 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 141.18 | 198.72 | 125.59 | 180.91 | 191.63 | 186.58 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 118.67 | 104.67 | 149.98 | 218.67 | 227.51 | 225.93 |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | 100.91 | 97.96 | 95.31 | 71.64 | 28.50 | 46.93 |
| பங்கு மூலதனம் | 40.00 | 40.00 | 40.00 | 40.00 | 40.00 | 40.00 |
| ஏனைய ஒதுக்கங்களுடன் மூலதனம் | 8.59 | 255.67 | 232.12 | 178.09 | 231.55 | 231.55 |

## தற்போதைய நடவடிக்கைகளும் எதிர்கால திட்டங்களும்

“பைபர் கிளாஸ்’ படகுகளை வங்காளதேசம் நாட்டுடன் கூட்டாக இணைந்து தயாரிப்பதற்கான சகல சம்பிரதாய வேலைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இதற்காக கப்பல் தளங்களுக்கான கட்டிடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக படகு அச்சுகளும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. படகுத்துறை நிர்மாணப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பங்குடமையாளர் தெரிவித்துள்ளார். இதன்படி, 2014 ல் உற்பத்திகளை ஆரம்பிக்கும் நோக்கில் பணிப்பாளர் சபையின் முதலாவது கூட்டம் வங்காளதேசத்தில் நடாத்தப்படும்.

- சீநோர் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது சசிமி படகு சோமாலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

- பைபர்கிளாஸ் படகு கைத்தொழிலை விஸ்தரிப்பதற்காக மிதக்கும் ரெஸ்டுரண்ட், வீட்டு படகுகள் போன்றவை இடம்பெறத்தக்க வகையில் புதிய முயற்சிகள் கண்டுபிடிக்கப்படும்.

- தனியார் துறையினருடன் போட்டியிடும் வகையில் சந்தை நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டு துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

- சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளின் வளர்ச்சி கருதி நாடு பூராகவும் விற்பனை முகவர்களை நியமிக்கவும் விற்பனையை மேம்படுத்துவதற்கும் முகாமை நடவடிக்கை எடுத்து வருகிறது.

- திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்தினை உபயோகிக்கும் படகுகளின் பழுது பார்த்தல் மற்றும் பகுதிகளாக பிரித்தெடுத்து பரீட்சிக்கும் வசதிகளை வழங்குவதற்காகவும், மட்டக்குளி படகுத்துறை சகல நவீன உபகரணங்களும் பொருத்தப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட ஒரு நவீன படகுத் துறையாக மாற்றுவதற்கு 250 மி ரூபா பெறுமதியான ஒரு திட்டத்தினை சீநோர் நிறுவனம் பொறுப்பேற்றிருக்கிறது.

- சீநோர் நிறுவனம் தமது சேவைகளுக்கான சர்வதேச அங்கீகாரத்தினை பெறுவதற்கு விசேடமாக வெளிநாட்டு வாடிக்கையாளர்களை கவர்வதற்காக Lloyd சான்றிதழை பெறுவதற்கு திட்டமிட்டிருக்கிறது. மனதில் பதியத்தக்க இந்த தகுதியினை அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆர்.எம். குணசேகர
(ACA,BA,DPFM.FMAAT., ATTRNEY-AT-LAW)

# குணசேகர ரத்னாயக்க அண்ட் கம்பனி
# பட்டயக் கணக்காளர்கள்

65/3
சேர் சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 02.

தொலைபேசி 011-2335194
தொலை நகல் 0112473833
மின்னஞ்சல் முகவரி :-komseky@gmail.cm

## வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கான சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

**நிதிக்கூற்றுகளுக்கான அறிக்கை**

2013டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான சீநோர் நிறுவனத்தின் நிதி நிலைமை அறிக்கையினையும் அதே திகதி முடிவடைந்த ஆண்டுக்கான சம்பந்தப்பட்ட விரிவான வருமானம் பற்றிய கூற்றுக்களையும் உரிமைப் பங்குகளில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் காசுப் பாய்ச்சல்களையும் அவற்றுக்கான முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளையும் மற்றும் விளக்க குறிப்புகளையும் நாம் பரிசோதனை செய்திருக்கிறோம்.

**நிதிக்கூற்றுகளுக்கான முகாமையின் பொறுப்புகள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப இந்தவகையான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர்களே பொறுப்பாக இருக்கின்றனர். இந்த பொறுப்பானது மூலப் பொருள் ரீதியிலான தவறான கூற்றுகள் இன்றி நியாயமான நிதிக்கூற்றுகளை தயாரித்து வழங்குவதற்கு வேண்டிய உள்ளக கட்டுப்பாடுகளை வடிவமைத்து அமுல்படுத்துவதனையும் உள்ளடக்கும்.

**கணக்காய்வின் எல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

எமது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களுக்கு ஓர் அபிப்பிராயத்தினை தெரிவிப்பது எமது கடமையாகும். நாம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப எமது கணக்காய்வினை நடாத்தியுள்ளோம். கணக்காய்வினை மேற்கொள்ளும் பொழுது நிதிக்கூற்றுக்களானது பொருட்கள் ரீதியிலான தவறுகளின்றி நியாயமான உறுதிப்பாட்டினை பெற்று கணக்காய்வினை திட்டமிட்டு செய்ய வேண்டும் என்று இலங்கை கணக்கீட்டு நியமம் வேண்டி நிற்கிறது.

நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்பாடுகள் மற்றும் தொகை சம்பந்தமான சான்றுகள் பரீட்சார்த்த அடிப்படையில் ஒரு கணக்காய்வின் போது ஆராயப்படுகிறது. அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யும் பொழுது பணிப்பாளர்களினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், சொல்லப்பட்ட நிதிக்கூற்றுகள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டவையா என்பதனை தீர்மானித்தல் போன்றன உள்ளடக்கப்படும்.

கணக்காய்வுக்கு அவசியமான எமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உள்ள எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நாம் பெற்றிருக்கிறோம். ஆகவே எமது கணக்காய்வானது எமது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படை ஒன்றினை வழங்குகிறது என நாம் நம்புகிறோம்.

## அபிப்பிராயம்

01 ஏப்ரல் 2013அம் திகதியிடப்பட்டு நிருவாகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு ஏற்ப ஒன்றிணைந்த நடவடிக்கைகள் நிறுவாகத்தினால் பின்பற்றப்படுகிறது. எமது அபிப்பிராயம் இதுவரை எமது பரிசோதனையில் இருந்து தோன்றுகிறது. கம்பனியானது 2013 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான கணக்கீட்டு பதிவுகளை சரியாக மேற்கொண்டுள்ளது. அத்துடன் 2013 டிசமபர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் அலுவல்களின் தன்மை, உண்மையாகவும் நியாயமானதாகவும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணிப்பீட்டு நியமங்களுக்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ளது.

**பிற சட்டம் மற்றும் ஏனைய தேவையான ஒழுங்கு முறைகள் மீதான அறிக்கை**

இந்த நிதி அறிக்கைகள் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151(2) பிரிவின் தேவைகளுக்கு ஏற்புடையதாகவும் காணப்படுகிறது.

ஒப்பம் ....

**குணசேகர ரத்னாயக்க அண்ட் கம்பனி**
**பட்டயக் கணக்காளர்கள்**
**கொழும்பு 02**

10 ஜுன் 2014

**வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்**
**முழுமையான வருமானக் கூற்று**

| 31 டிசம்பர் முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| **தொடர்ச்சியான நடவடிக்கைகள்** | | | |
| வருமானம் | **3** | 73,392,604.99 | 63,443,453.78 |
| விற்பனைக் கிரயம் | **4** | (62,441,119.06) | (50,594,833.18) |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | | **10,951,485.93** | **12,848,620.60** |
| நிர்மாணம் மற்றும் வியாபார நடவடிக்கைகளிலிருந்து மொத்த இலாபம் | **5** | 45,630,962.54 | 44,345,180.37 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | **6** | 17,260,043.52 | 11,660,727.25 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | **7** | (14,158,412.61) | (13,000,920.96) |
| நிர்வாகச் செலவுகள் | **8** | (47,299,258.69) | (50,079,616.44) |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | **9** | (1,098,055.49) | (137,164.01) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **11,286,765.20** | **5,636,826.81** |
| நிதிக் கிரயங்கள் | **10** | (10,727,241.55) | (9,776,318.68) |
| நிதி வருமானம் | **11** | 97,446.87 | 106,758.85 |
| **தொடர்நடவடிக்கைகளில் இருந்து வரிக்கு முன் இலாபம்** | | **656,970.52** | **(4,032,733.02)** |
| அசாதாரண செலவுகள் | | - | (2,741,297.42) |
| | | **656,970.52** | (6,774,030.44) |
| வருமானவரி செலவுகள் | **12** | (379,468.28) | (321,475.47) |
| **தொடர் நடவடிக்கைகளில் இருந்து வருடத்திற்கான இலாபம்** | | **277,502.24** | **(7,095,505.91)** |
| **தொடர்ச்சியற்ற நடவடிக்கைகள்** | | | |
| தொடர்ச்சியற்ற நடவடிக்கைகளில் இருந்து வரி கழித்த பின் வருடத்திற்கான நட்டம் | | - | |
| **வருடத்திற்கான இலாபம்.** | | **277,502.24** | **(7,095,505.91)** |

**வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்**
**நிதி நிலைமை பற்றிய கூற்று**

| 31 டிசம்பர் முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா | 2011 ரூபா |
|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | | |
| ஆதனம்,பொறி, உபகரணம் | 13 | 309,503,287.18 | 287,584,443.70 | 274,192,663.69 |
| மூலதனம்-WIP | | 4,145,000.00 | 4,145,000.00 | 9,108,888.00 |
| ஸ்ரீ-பங்கலா படகு முதலீடுகள் j/v | | 1,961,850.00 | 1,961,850.00 | 1,961,850.00 |
| முதலீட்டுதிட்டங்கள் - மீன்பிடித்தல் | | 2,239,404.26 | 2,239,404.26 | 2,239,404.26 |
| | | 317,849,541.44 | 295,930,697.96 | 287,502,805.95 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பொருட்பதிவேடுகள் | **14** | 65,730,342.09 | 82,183,537.95 | 66,220,033.14 |
| நோத் சீ லிமிட்டெட் | | 38,845,840.65 | 38,845,840.65 | 38,845,840.65 |
| வியாபார கடன் பட்டோர் | **15** | 51,898,367.73 | 42,770,099.10 | 48,973,707.79 |
| ஊழியர் குழுகடன்பட்டோர் | **16** | 1,673,599.47 | 1,337,423.80 | 2,179,993.00 |
| ஏனைய கிடைக்க வேண்டியவை | **17** | 26,379,838.32 | 24,089,539.66 | 21,070,221.00 |
| கேள்வி வைப்புகள் | | 1,300,000.00 | 1,300,000.00 | 1,000,000.00 |
| காசும் வங்கியும் | **18** | 752,925.18 | 1,112,276.56 | 2,626,015.86 |
| | | 186,580,913.44 | 191,638,717.72 | 180,915,811.44 |
| **மொத்த சொத்துக்கள்** | | **504,430,454.88** | **487,569,415.68** | **468,418,617.39** |
| **உரி- பங்கும் மற்றும் பொறுப்புகளும்** | | | | |
| **உரிமைப்பங்கு** | | | | |
| அனுமதித்த மூலதனம் | | 40,000,000.00 | 40,000,000.00 | 40,000,000.00 |
| வருமான ஒதுக்குகள் | | 260,559,447.73 | 260,559,447.73 | 260,559,447.73 |
| மூலதன ஒதுக்கு | | 62,601,030.04 | 62,601,030.04 | 62,601,030.04 |
| தடுத்து வைக்கப்பட்ட இலாபம்/(நட்டம்) | | (131,606,875.46) | (131,604,918.32) | (185,066,913.51) |
| **மொத்த உரிமைப் பங்கு** | | 231,553,602.31 | 231,555,559.45 | 178,093,564.26 |
| **நடைமுறையற்ற- பொறுப்புகள்** | | | | |
| அமைச்சின் உதவி | **19** | 2,078,392.40 | 2,078,392.40 | 2,078,392.40 |
| பிற்போடப்பட்ட பொறுப்புகள் | **20** | 44,425,160.73 | 25,389,761.48 | 9,012,594.08 |
| வட்டி மீது பெற்ற கடன்கள் | **21** | 434,884.76 | 757,297.74 | |
| சுனாமி புனருத்தாரன திட்டம் | | - | - | 60,557,501.10 |
| | | 46,938,437.89 | 28,225,451.62 | 71,648,487.58 |

**வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்**
**நிதி நிலைமை பற்றிய கூற்று**

| 31 டிசம்பர் முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா | 2011 ரூபா |
|---|---|---|---|---|
| **நடைமுறைப் பொறுபபுகள்** | | | | |
| வட்டிக்கு கடன் பெறல் | **22** | 322,411.11 | 275,936.71 | - |
| வியாபார கடன் கொடுத்தோர்கள் | **23** | 49,603,067.45 | 45,077,649.64 | 55,612,473.00 |
| ஏனைய சென்மதிகள் | **24** | 81,897,545.88 | 81,420,718.36 | 90,252,192.04 |
| யாழ்ப்பாண நட்டஈட்டு க/கு | | 118,569.63 | 118,569.63 | 118,819.63 |
| செலு. வேண்டிய வருமான வரி | **25** | (5,389,530.24) | 3,237,242.11 | 2,546,806.64 |
| குறுகியகால கடன்கள் | **26** | 63,209,065.34 | 54,530,838.34 | 42,923,650.91 |
| வங்கிமேலதிகப் பற்று | **27** | 36,177,285.51 | 43,127,449.82 | 27,222,623.33 |
| | | 225,938,414.68 | 227,788,404.61 | 218,676,565.55 |
| **மொத்த பொறுப்புகள்** | | 272,876,852.58 | 256,013,856.23 | 290,325,053.13 |
| **மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புகளும்** | | **504,430,454.88** | **487,569,415.68** | **468,418,617.39** |

நிதிக்கூற்றில் கணக்கியல் கொள்கைகளும் குறிப்புகளும் இன்றியமையாத ஒரு பிரிவாகும். 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் மூலம் வேண்டப்பட்ட விதிமுறைகளின்படி மேற்படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நாம் இத்தாள் அத்தாட்சிப் படுத்துகிறோம்.

ஒப்பம்

எச்.டி.டி. மதுகா
நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றினை தயாரித்து வழங்குவதற்கான பொறுப்பு பணிப்பாளர் சபையிடம் காணப்படுகிறது.

பணிப்பாளர் சபையின் சார்பாக

ஒப்பம்

**பி.வி. சரத்குமார த சில்வா**
பணிப்பாளர்/ தலைவர்
திகதி :- 26.05.2014

ஒப்பம்

**கே. உஜித் அனுராதா**
பணிப்பாளர்
திகதி:- 26.05.2014

## வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்

**2013 டிசம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான**

**உரிமைப் பங்கில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய கூற்று**

| | பங்கு மூலதனம் | மூலதன ஒதுக்கு | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | திரண்ட இலாபம்/(நட்டம்) | மொத்த உரிமைப்பங்கு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2013 ஜனவரி 31 ல் உள்வாரான மீதி | 40,000,000.00 | 62,601,030.00 | 260,559,447.00 | (185,066,914.00) | 178,093,563.00 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | (7,095,506.00) | (7,095,506.00) |
| முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கல்கள் | | | | 60,278,042.30 | |
| 2013 டிசம்பர் 31 ல் உள்ளவாரான மீதி | **40,000,000.00** | **62,601,030.00** | **260,559,447.00** | **(131,884,377.70)** | **170,998,057.00** |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | | 277,502.24 | |
| 2013 டிசம்பர் 31 ல் உள்ளவாரான மீதி | **40,000,000.00** | **62,601,030.00** | **260,559,447.00** | **(131,606,875.46)** | **170,998,057.00** |

**வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

2013 டிசம்பர்31 ல் முடிவடைந்த வருடத்திற்கானது (சகல தரவுகளும் ரூபாயில் தரப்பட்டுள்ளது)

| | 2013 | 2012 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாச்சல்** | | |
| வரிவிதிப்புக்கு முன்னர் இலாபம் | 656,970.52 | (6,774,030.44) |
| கூட்டு:- பெறுமானத்தேய்வு | 12,924,336.02 | 6,916,883.73 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 1,659,184.64 | 3,693,261.39 |
| வட்டி செலுத்தல்கள் | 10,449,152.19 | 9,458,181.61 |
| கழி:- நிலையான சொத்து விற்பனை மீதான இலாபம் | - | (436,520.00) |
| முன்னைய வருட செம்மையாக்கல்கள் | (279,459.38) | 368,709.06 |
| **தொழில்படு மூலதன மாற்றத்துக்கு முன் செயற்பாட்டுஇலாபம்** | **25,410,183.99** | **13,226,485.35** |
| பொருட்பதிவேடுகளில் (அதிகரிப்பு)/(குறைவு) | 16,453,195.86 | (15,963,504.81) |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகளில் (அதிகரிப்பு)/(குறைவு) | (20,760,983.59) | 4,026,859.23 |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளில் (அதிகரிப்பு)/(குறைவு) | 5,002,245.33 | (19,366,297.04) |
| பிற்போடப்பட்ட வருமானத்தில் (அதிகரிப்பு)/(குறைவு) | 18,867,642.25 | -- |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு உருவாக்கம்** | 44,972,283.84 | (18,076,457.27) |
| கழி:- முதலீட்டு வருமானம் | (97,446.87) | (106,758.85) |
